
37

# புத்தர் வரலாறு

382
4- APR 195



Q4
N57
120

சென்னை கல்வித்துறை வெளியீடு.

# புத்தர் வரலாறு.

(முதியோர் கல்வி—சுவடி 13.)

37/2.57.

S. N. சோக்கலிங்கம்.

சென்னை கல்வித்துறை வெளியீடு.

# முன்னுரை.

குடியாட்சிக்குக் கல்வி அடிப்படை. அக்கல்வி முதியோர்க்கும் தேவை. எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டால் போதாது. மேலும் தொடர்ந்து படிக்க வேண்டும். தொடர்ந்து படிக்க ஏற்ற நூல்கள் தேவை. அவை அதிகம் இல்லை. அவற்றை எழுதத் தனிப் பயிற்சி வேண்டும். அப்பயிற்சி முதியோர் இலக்கியப் பண்ணையில் அளிக்கப்பட்டது. இப்பண்ணை 1955-ம் ஆண்டில் பீளமேட்டில் நடந்தது. இதை நடத்தியது சென்னை அரசாங்கம். உதவியது இந்திய அரசாங்கம்.

இப்பண்ணையில் உருவானது இவ்வெளியீடு. இதைப் போல் வேறு சிலவும் வெளிவருகின்றன. முதியோர் படித்துப் பயன் பெறவேண்டு மென்பது எல்லோருடைய விருப்பம்.

சென்னை,
6-9-1956.

நெ. து. சுந்தரவடிவேலு,
பொதுக் கல்வி இயக்குநர்.

# இதில் உள்ளவை.



| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மன வேதனை ... ... | 1 |
| 2. | பெரிய போராட்டம் ... ... | 5 |
| 3. | காட்டில் தவம் ... ... | 7 |
| 4. | மகனை இழந்த தாய் ... ... | 8 |
| 5. | கவலைக்கு நல்ல மருந்து ... ... | 10 |
| 6. | கடுகு வேண்டும் ... ... | 14 |
| 7. | அதுவே உலகம் ... ... | 16 |

# புத்தர் வரலாறு


## 1. மன வேதனை.

சித்தார்த்தர் அரச குடும்பத்தில் பிறந்தவர். அவர் மனக்கவலை என்றால் இன்னது என்று தெரியாமல் வளர்ந்தார். அவருக்குச் சிறு வயதிலேயே திருமணம் நடந்தது.

சித்தார்த்தர் ஒரு சமயம் அரண்மனையை விட்டு வெளியே வந்தார். சாலையில் நோயாளிகளைக் கண்டார். தள்ளாடும் கிழவரைப் பார்த்தார். பிணம் போவதைப் பார்த்தார். மரத்தில் இருந்து உதிரும்



தள்ளாடும் கிழவரைப் பார்த்தார்.



பிணம் போவதைப் பார்த்தார்.



மரத்தில் இருந்து உதிரும் இலைகளைக் கண்டார்.

இலைகளைக் கண்டார். அவருக்கு மனவேதனை ஏற்பட்டது. 'மக்கள் ஏன் துன்புறவேண்டும்? தங்கள் துன்பங்களில் இருந்து அவர்க்ள் தப்பமுடியாதா?' என்று யோசித்தார்.



சித்தார்த்தர்
குடும்பத்தை விட்டுப் பிரிதல்.

## 2. பெரிய போராட்டம்.

அவருக்கு அழகான ஓர் குழந்தை பிறந்தது. உறவினரும் ஊராரும் மகிழ்ந்தனர். சித்தார்த்தர் மக்கள் நிலையைப் பற்றி ஆழ்ந்து யோசித்தார். வீட்டை விட்டுக் காட்டுக்குப் போக நினைத்தார். ஒரு நாள் இரவு தம்

அரண்மனையை விட்டுச் செல்ல முடிவு செய்தார். மனைவி படுத்திருந்தாள். பக்கத்தில் குழந்தை தூங்கியது. ஆனால், அன்புள்ள மனைவியையும் அருமைக் குழந்தையையும் பிரிய மனம் இல்லை. மனத்தில் பெரிய போராட்டம் ஏற்பட்டது. கடைசியில் அரண்மனையை விட்டு நீங்கினார். அன்புள்ள மனைவியையும் ஆசைக் குழந்தையையும் மறந்தார்.

அரச குடும்பத்தில் பிறந்து வாழ்ந்தவர் சித்தார்த்தர். அவர் மகிழ்ச்சியோடு இருக்கலாம். ஆனால், அவரோ பிறர் துன்பங்களைக் குறித்து நினைத்தார். அவைகளைப் போக்க அவர் விரும்பினார். அதனால் தம் சுகங்களை வெறுத்தார்.

## 3. காட்டில் தவம்.

சித்தார்த்தர் காட்டுக்குப் போனார். அங்கே அவர் தவம் செய்து ஞானம் அடைய முயன்றார். பல நாட்கள் பட்டினி இருந்தார். அவர் உடல் இளைத்தது. பயன் ஒன்றும் இல்லை.


பிறகு சித்தார்த்தர் கயா என்ற இடத்திற்குப் போனார். அவ்வூர் ஆற்றங்கரை அரசமரத்து அடியில் அமர்ந்தார். அந்த மரம் போதிமரம் என்றும் வழங்கப்படும். இரவு பகலாக ஓயாது சிந்தனை செய்தார். ஓயாத சிந்தனையால் அவருக்கு நல்ல ஞானம் உண்டாயிற்று. 'துன்பத்திற்குக் காரணம் ஆசை. மக்கள் ஆசையை ஒழிக்கவேண்டும். தோன்றுவன எல்லாம் நிலையற்றவை. அவை

பிறப்பு இறப்பிற்கு உட்பட்டவை’ என உண்மை ஞானம் பெற்றார். பல உண்மைகளை மக்களுக்கு உபதேசித்தார்.

சித்தார்த்தரின் உபதேச மொழிகள் மிகவும் சிறந்தவை. சித்தார்த்தர் ‘புத்தர்’ என்று அழைக்கப்பட்டார். புத்தர் உலகப் பெரியாருள் ஒருவர். அவர் தோற்றுவித்த மதம் ‘பௌத்த மதம்’.

## 4. மகனை இழந்த தாய்.

கிருசாகௌதமி என்று ஒரு பெண் இருந்தாள். அவளுக்கு அழகான ஆண்பிள்ளை ஒன்று பிறந்தது. அவள் அதை அன்புடன் வளர்த்தாள்.



புத்தரும்
மகனை இழந்த தாயும்.

கிருசாகௌதமியின் பிள்ளை ஒரு நாள் மாலை, வெளியில் விளையாடிக்கொண்டு இருந்தான். அங்கே செடிகள் அடர்ந்து இருந்தன. அந்த அடர்ந்த இடத்தில் இருந்த பாம்பு பிள்ளையைக் கடித்துவிட்டது. பாம்பு கடித்ததால் பிள்ளையின் உடலில் விஷம் பரவியது. கண்

ஒரே நிலையில் நின்றது. நீட்டிய கால்கள் நீட்டியபடியே இருந்தன. மகனை இழந்த தாய் பல மருத்துவரிடம் சென்றாள்; பிள்ளையைக் காட்டினாள். மருத்துவர் அனைவரும் "அதற்கு மருந்து இல்லை; பிள்ளை இறந்துவிட்டான்" என்று சொன்னார்கள்.

## 5. கவலைக்கு நல்ல மருந்து.

புத்தர் அவ்வேளை அந்த ஊருக்குவந்தார். அழுதுகொண்டே மகனைக்கையில் எடுத்துக்கொண்டு சென்றாள்; புத்தரை வணங்கினாள்.

புத்தர்: என்ன அம்மா! ஏன் அழுகிறாய்?

கிருசாகௌதமி: சுவாமி, தாங்கள் மிகவும் சக்தி உடையவர்கள். என் குறையைப் போக்க வேண்டுகிறேன்.

புத்தர்: என்ன குறை அம்மா? தாராளமாகச் சொல்.

கிருசாகௌதமி: எனக்கு இவன் ஒரே மகன். இவனைத் தவிர எனக்கு வேறு கதி இல்லை. மார்பில் வைத்து இவனை அன்பாக வளர்த்தேன். ஈ, எறும்பு கடிக்காமல் பாதுகாத்தேன். சீராட்டிப் பாராட்டி என் கண் போல் காத்தேன். இவனை நான் தவம் செய்து பெற்றேன். எப்போதும் என்னைப் பிரியாமல் இருந்தான். இப்போது என்னைப் பிரிந்துவிட்டான். பாம்பு கடித்து இறந்துவிட்டான். என்

மனம் துடிக்கிறது. பெற்ற வயிறு எரிகிறது. வேறு பிள்ளையும் இல்லை. உறவினரும் இல்லை. தாங்கள் என்மீது கருணை காட்டவேண்டும்.

புத்தர்: என்னால் முடிந்ததைச் செய்கிறேன்.

கிருசாகௌதமி: பலரிடம் சென்றும் பயன் இல்லை. குழந்தை என் முகம் பார்த்து சிரிக்கவில்லை. எனக்கு முத்தம் தரும் குழந்தை அசையவும் இல்லையே. நினைத்தாலே என் நெஞ்சம் பதறுகிறது. என் புத்தி தடுமாறுகிறது. தலை சுழலுகிறது. நான் என்ன செய்வேன்!

புத்தர்: அம்மா, நீ வருந்த வேண்டாம். மனக்கவலைக்கு

நல்ல மருந்து உண்டு. இறந்த குழந்தையை உயிருடன் எழுப்புகிறேன். உன்னோடு விளையாடச் செய்கிறேன். நீ ஒரு காரியம் செய்தால், இது முடியும்.

கிருசாகௌதமி: ஐயா, அதற்கு நான் என்ன செய்யவேண்டும்? சொல்லுங்கள்! சொல்லுங்கள்!! உடனே செய்கிறேன்!!!

புத்தர்: இப்பொழுது ஒரு பிடி கடுகு வேண்டும். நீ கடுகு வாங்கும் வீட்டில் ஒருவருமே இறந்து இருக்கக்கூடாது. யாரும் சாகாத வீட்டில் இருந்து கடுகு வாங்கிவர வேண்டும்.

கிருசாகௌதமி: அப்படியா! இதோ வாங்கி வருகிறேன்.

# 6. கடுகு வேண்டும்.

[கிருசாகௌதமி தன் மகனைத் தூக்கிக்கொண்டு ஊருக்குள் வேகமாகச் சென்றாள். ஒரு வீட்டின் வாசலில் போய் நின்றாள். வீட்டுக்காரியைப் பார்த்து முறையிட்டாள்.]

கிருசாகௌதமி: அம்மா! உனக்குப் புண்ணியம். கடுகு இருந்தால் கொஞ்சம் கொடுங்கள். மிகவும் அவசரமாக வேண்டும்.

வீட்டுக்காரி: பாவம்! பார்த்தால் மிகவும் கவலையோடு இருக்கிறாய். கடுகுதானே வேண்டும்? இரு, கொண்டுவந்து கொடுக்கிறேன்.

கிருசாகௌதமி: அம்மா, ஒரு செய்தி தெரியவேண்டும். உங்கள் வீட்டில் யாரும் இறந்தது இல்லையே?

வீட்டுக்காரி: அம்மா, எதற்காக அப்படிக் கேட்கிறாய்?

கிருசாகௌதமி: எனக்கு யாரும் சாகாத வீட்டில் இருந்து கடுகு வேண்டும். அதுவே எனக்கு இப்பொழுது தேவை.

வீட்டுக்காரி: சென்ற ஆண்டு என் தம்பி இறந்துவிட்டான். ஆகவே, என் வீட்டுக் கடுகு தங்களுக்கு உதவாதா?

கிருசாகௌதமி: ஏன் அம்மா! பக்கத்து வீட்டில் கேட்கலாமா?

வீட்டுக்காரி: பக்கத்து வீட்டிலா? ஐயோ பாவம்! போன வாரம் அந்த அம்மாவின் கணவன் இறந்தான். அவள் விதவையாகி வருந்துகிறாள்.

கிருசாகௌதமி: இந்த எதிர் வீட்டிலாவது கிடைக்குமா? எனக்கு எப்படியும் கடுகு வேண்டுமே!

வீட்டுக்காரி: எதிர் வீட்டிலா? அதை ஏன் அம்மா கேட்கிறாய்! இரண்டு மாதங்களுக்கு முன்பு அந்த அம்மாளின் குழந்தை இறந்துவிட்டது. அவள் குழந்தையை இழந்த ஏக்கத்தோடு இருக்கிறாள்.

## 7. அதுவே உலகம்.

கிருசாகௌதமி: 'இந்த ஊரில் ஒரு வீட்டிலாவதுகிடைக்காதா! யாரும்சாகாதவீடே இல்லையா!!

வீட்டுக்காரி: அம்மா, சொல்லப் போனால் யாரும் சாகாத வீடே இல்லை.

கிருசாகௌதமி: சரி, அம்மா! நான் போய் வருகிறேன்.

கிருசாகௌதமி பல முறை அலைந்தும் பயன் இல்லை. ஒருவரும் இறவாத வீடு காணப் படவில்லை. பிறந்தவர் யாரும் இறப்பவரே என்று தெளிந்தாள். புத்திர சோகம் ஒழிந்து மனத் திடம் கொண்டாள். பிணத்தை மயானத்தில் சேர்த்தாள். மகனை மயானத்தில் சேர்த்துவிட்டு புத்தர் இருக்கும் இடத்திற்கு வந்தாள்.

புத்தர்: என்ன அம்மா? கடுகு கிடைத்ததா?

கிருசாகௌதமி: இல்லை, சுவாமி! யாரும் சாகாத வீடே இல்லை. 'பிறப்பு இருந்தால் இறப்பு உண்டு' என்று அறிந்தேன்.

மனத் திடத்தோடு மகனை மயானத்தில் சேர்த்துவிட்டேன்.

புத்தர்: அம்மா! அதுதான் சரி. இவ்வுலகில் ஒன்றும் நிலையில்லை. அதுவே உலகம். நீ இந்த உண்மையை அறிவாய்.

கிருசாகௌதமி: சுவாமி! உண்மை உணர்ந்தேன். 'பிறந்தவர் இறப்பது நிச்சயம்' என்று தெரிந்தேன்.

[அவள் புத்த மதத்தைச் சேர்ந்தாள்.]

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1957. B6510

# சென்னை கல்வித்துறை முதியோர் கல்வி வெளியீடுகள்

## மடல்கள் (விலை ஒரு அணா)

1. ஆணியும் நிமிஷமும்
2. கேள்வி பதில்
3. இவை ஆகாது
4. நாட்டின் பெருமை
5. கண்டு கற்போம்

## சுவடிகள் (விலை இரண்டு அணா)

1. பார்வதிக்கு ஒரே பிள்ளை
2. பெண்ணா? போரா?
3. நல்ல தீர்ப்பு
4. வரப்புத் தகராறு
5. ஊதாரி ராமனும் உழைப்பாளி கந்தனும்
6. சுவேதன்
7. சேவல் சண்டை
8. மந்திரம் இல்லை! மாயம் இல்லை!!
9. ஐயோ! தீ!
10. செவலை நொண்டுகிறது
11. வள்ளுவர் பேசுகிறார்
12. ஒரு இனிப்பான செய்தி
13. புத்தர் வரலாறு
14. வண்ணானும் வண்ணாத்தியும்
15. வண்டி வளர்ந்த கதை
16. எப்படிப் பிறந்தது?
17. எப்படிச் செய்தனர்?
18. மணி என்ன?
19. வசதி வேண்டுமா?
20. பணம் சேர்த்தீரா?
21. முத்தையனுக்கு வழி பிறந்தது
22. வாழும் வழி
23. ராணி மாளிகை
24. பாம்பு கடித்தால்......
25. ஓடி ஒளிந்த ராமன்
26. நகையே வேண்டாம் மச்சான்
27. மனம் மாறுமா?
28. குப்பையே மாணிக்கம்
29. நமது தேசியக்கொடி
30. வானம்

## நூல்கள் (விலை இரண்டு அணா)

1. மின்னலும் இடியும்
2. நீரில் மூழ்கினால்......
3. முத்து ரத்தினம்
4. குடை சாய்ந்தது
5. ஒத்தை மாட்டு செக்கும் புகையில்லாத அடுப்பும்
6. பணம் வாங்காத வைத்தியர்


கிடைக்கும் இடம்:—

சென்னை அரசினர் அச்சகக் கிளை,
(புத்தக விற்பனை நிலையம்)
166, மவுண்டு ரோடு, சென்னை-2